CREATIONS OF SOCIAL RELATIONS IN FRIENDSHIP THROUGH THIRUKKURAL

சமூக உறவுகள் உற்பத்தியில் திருக்குறளின் நட்பு

saravanajothi seetharaman/ சரவணஜோதி சீத்தாராமன்

Assistant Professor, Thaiagarajar College,

Madurai, Tamilnadu, India.

Abstract… The major objective of the research is to analyses how the concept of the friendship constructed in the production of social relations. The design of the study is qualitative method and the methods of Descriptive analysis has also been used. In this case, the concept of friendship, as stated in thirukkural, is concerned with building social relations that do not have blood relatives. Friendship play an important role in the arts till now. Art, literature, painting, sculpture, and cinema designed friendship as a most valuable one. Friendship is the first thing to be considered in social relationships. Thirukkural constructed the friendship concept is the major reason of the country's production system. Theories of friendship built by Thirukkural helped to enrich the life. In this world, the lives of men are far more beneficial to society than family relationships. Therefore, socially friendly friendship charities such as proverbial, naladiyar, nanamikkadikkai emphasize. As a result of this approach, the concept of friendship built in Thirukkural is built on a backdrop of morality. This suggests that socially friendly friendships are built on the back of morality. The researcher confirms that there is a connection between friendship and social relationship production.

Keywords… Thirukkural, Friendship, Proverbial, Social production, Art, Ethic literature.

ஆய்வுச்சாரம்- இவ்வாய்வின் முதன்மை நோக்கம் சமூக உறவுகள் உற்பத்தியில் திருக்குறளின் நட்பு அதிகாரம் கட்டமைக்கப்பட்டுள்ள கருத்தியலை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அடிப்படையில் விளக்கமுறை அணுகுமுறை கையளாப்பட்டுள்ளன. இவ்வாய்வில் திருக்குறளில் கூறப்பட்டுள்ள நட்பு குறித்த கருத்தியல் இரத்த உறவு இல்லாத சமூக உறவுகளை கட்டமைப்பதில் வினையாற்றுகிறது. நடப்புக்காலம் வரை நட்பு என்ற உறவு கலைத்துறைகளில் முக்கியமான வினையை ஆற்றிகின்றன. இலக்கியம், ஓவியம், சிற்பம், சினிமா போன்ற கலைத்துறைகள் நட்பு என்பது உயர்ந்த விழுமியமாக கட்டமைக்கின்றன. சமூக உறவுகளில் முதன்மையானதாக கருதப்படுவது நட்பு ஆகும். இந்நட்பை உற்பத்தி பன்னும் முறை குறித்து திருக்குறள் கூறுகின்ற கருத்தியல் இன்றியமையாதாகும். திருக்குறள் கட்டமைத்த நட்பு குறித்த கருத்தியல்கள் நடைமுறை வாழ்வியலுக்கு மேம்பாட்டியல் செல்நெறியாக அமைகின்றன. இவ்வுலகில் மனிதர்களின் வாழ்க்கை குடும்ப உறவுகளைத் தாண்டி சமூகத்தில்தான் அதிகம் பயனிப்பதாக அமைகின்றது. எனவே, சமூக உறவான நட்பை அற இலக்கியங்களான பழமொழிநானூறு, நாலடியார், நான்மணிக்கடிகை போன்ற நூல்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றன. இவ்வாய்வின் பயனாக திருக்குறளில் கட்டமைத்துள்ள நட்பு குறித்த கருத்தியல் அறநெறிகளின் ஒழுகாலாற்றுப் பின்புலத்தில் கட்டமைத்துள்ளன. அறநெறிகளின் பின்புலத்தில் சமூக உறவான நட்பு கட்டமைக்கப்பட்டுள்ளதைக் கண்டறிந்து கூறுவதாக இவ்வாய்வு அமைகிறது. நட்புக்கும் சமூக உறவு உற்பத்திக்கும் தொடர்பு இருக்கிறது என்பதை ஆய்வாளர் உறுதிசெய்கின்றார்.

கருச்சொற்கள்..திருக்குறள், நட்பு, பழமொழிநானூறு, சமூக உறவு, சினிமா, அற இலக்கியம்.

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் பெரும்பான்மையான இடத்தைப் பிடித்திருப்பது அறமாகும். செவ்வியல் இலக்கியங்கள் உலகப்பொதுமையான வழ்வியல் கூறுகளை எடுத்துரைத்தன. எல்லா நாட்டினரும், சமூகமும் உற்று கவனிக்கப்பட வேண்டிய இடத்தை தமிழ் இலக்கியங்கள் கட்டமைத்துள்ளன. வரலாற்று அறிஞர்களால் உலகப்பொதுமறை என்று போற்றப்படும் திருக்குறள் சமுக விழுமியங்களைக் கட்டமைப்பதில் பெரும் பங்காற்றியுள்ளன. நடைமுறை வாழ்க்கையில் இன்றும் பல்வேறு தரப்பு மக்களால் ஒழுக்க நெறிகளுக்குச் சான்று காட்டுவது திருக்குறளாகும். திணைச் சமூகத்திற்குப் பின் வாழ்வியல் விழுமியங்கள் மாற்றம் பெறுகின்றன. சான்றாக, கொல்லாமை, புலால் உண்ணாமை, கள்ளுண்ணாமை இப்படி பல வாழ்வியல் அறங்கள் மாற்றம் பெற்றன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களை அறநெறிக்காலம் ஆ.வேலுப்பிள்ளை, (1985) *தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்*, என்று நூலில் வகைப்படுத்துகிறார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் அறநெறி இலக்கியங்கள் சமூக விழுமியங்கள் உருவாக்குவதில் பெரும் பங்கு ஆற்றியுள்ளன. இவர்கள் உருவாக்கிய விழுமியங்களின் பின்னனியில் திருக்குறள் கட்டமைத்த நட்பு சமூக ஏற்புத்தன்மையப் பெற்று இருக்கின்றன. சங்க காலத்தில், பிசிரந்தையார் - கோப்பெருஞ்சோழன், கபிலர் – பாரி, அவ்வை – அதியமான் என்பவர்களின் உறவுகள் நட்பின் இலக்கணமாக திகழ்ந்தன. இத்தகைய நட்புகள் கட்டமைத்த விழுமியங்கள், விட்டுகொடுத்தல், நம்பகத்தன்மை, துன்பக்காலங்களில் உதவுதல் என்பனவாக அமைந்தன. அறநெறிக்காலத்தில் நட்பு குறித்த இலக்கணம், நட்பின் சிறப்பு, நட்பின் தன்மை, நட்பு கொள்ள வேண்டிய வழிமுறை என்று விரிவடைகிறது. சமூக உறவில் நட்பின் பங்கு, வள்ளுவர் கட்டமைத்த நட்பு, வாழ்க்கையும் நட்பும், என்ற பொருண்மையில் காண்பதாக இவ்வாய்வு அமைகிறது.

ஆய்வு முன்னோடிகள்

தமிழ் இலக்கியங்களில் நட்பு, காதல், அன்பு என்று பல்வேறு அறிஞர்களால் ஆராய்ந்து கட்டுரைகளும் நூல்களும் எழுதப்பட்டுள்ளன. பெரும்பாலும் சங்க இலக்கியத்தை வைத்து மட்டும் காதல் நட்பு என்று ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளன. ஆனால் அற இலக்கியங்கள் என்று அழைக்கப்படுகின்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் நட்பு அதிகாரம் குறித்து ஆய்வுக்கட்டுரைகள் வந்துள்ளன. ஆனால் சமூக உற்பத்தி உறவில் நட்பு என்று இதுவரை பொருத்திப் பார்க்கவில்லை. மு.வாரதராசனார், தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், போன்றோர்கள் கட்டுரைகளில் சங்க மாந்தர்களில் வாழ்வியலில் நட்பு குறித்து ஆராய்ந்துள்ளனர். திருக்குறள், நாலடியார், பழமொழிநானூறு, ஏலதி, சிறுபஞ்சமூலம் ஆகிய நூல்களில் நட்பு குறித்த கூறுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. நட்பு என்பது வாழ்வியல் விழுமியம் என்ற பொருளில் பகுத்து ஆராயப்பட்டுள்ளன.

வேலுப்பிள்ளை அவர்களால் *தாமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்* (1985 பாரி புத்தக பண்னை) என்ற நூலில் பதினெண்கீழ்கணக்கு நூல்களை அற இலக்கிய நெறி என்பதாக முதன் முதலில் எடுத்துரைக்கப்படுகிறது.

வ.சுப. மாணிக்கம் எழுதிய *வள்ளுவம்* (1993), என்ற நூலில் நட்பு குறித்த கட்டுரை திருக்குறளில் காணப்படும் அற நெறிகள் மக்கள் வாழ்வியலோடு இணைந்து உள்ளன என்பதை விரிவாக ஆராய்கிறது.

வ.சுப. மாணிக்கம் எழுதிய *தமிழ்க்காதல்* (1993), என்ற நூலில் அன்பு குறித்து விரிவாக ஆரயப்பட்ட நூலாகும். சங்க கால மக்களின் வாழ்வியலில் அன்பு பிரதானமாக இருந்தன என்று இந்நூல் எடுத்துரைக்கிறது.

Saravanajothi seetharaman (2020), Ethic literature and tradition of thinnai theory என்ற கட்டுரையில், அற இலக்கியங்கல் சமூக ஒழுக்கங்கள் சமயங்களின் பின்புலத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளன என்பதை எடுத்துறைக்கின்றது. வள்ளுவர் கட்டமைக்கும் வாழ்வியல் முறை, சமணர்கள் கட்டமைக்கும் வாழ்வியல் முறை, வைதீகம் கட்டமைக்கும் வாழ்வியல் முறை என்ற கருத்தியல் பின்புலத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

Saravanajothi seetharaman (2020), *Morality Thoughts and Social Awareness in Vivekasinthamani* என்ற கட்டுரையில் ஒழுக்கவியல் சிந்தனை சமூக விழிப்புணவை ஏற்படுத்துகின்றன. சமூக விழுப்புணர்வு என்பது வாழ்வியல் விழுமியங்களாக உருவாகின்றன என்ற கருத்து முன்வைக்கப் படுகிறது.

Saravanajothi seetharaman (2020), Avoiding mean associations in the socio political background of Thirukkural. என்ற கட்டுரையில் சிற்றினம் சேராமை அதிகாரத்தின் மூலம் இனம் என்றில் சொல்லின் கட்டமைப்பு குறித்து இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

நட்பு குறித்த கருத்தியல் பிற்கால இலக்கியங்களிலும் வளர்ச்சி பெற்றது. சமூக உறவு உற்பத்தியில் வள்ளுவர் கட்டமைத்த நட்பு நடப்பு திரைப்படங்கள் வரை பிரதிபலிக்கிறது. நட்பில் துரோகம் கூடாது, நம்பகத்தன்மை, எதிர்ப்பார்ப்பு இல்லதா உறவு, என்று நட்பு குறித்த கருத்தியல் சமூக விழுமியமாக நடப்புக் காலத்தில் உள்ளன. இந்த விழுமியம் தழிழர்களின் வாழ்வில் வள்ளுவரால் கட்டமைத்த கூறாக அமைகின்றன என்பதை எடுத்துரைப்பதாக ஆய்வாளர் கூறுகிறார். சமூக உறவுகள் உருவாக்கத்தில் இலக்கியங்களின் பொருண்மைகள் பின்னனியில் இருப்பதாக இதுவரை விரிவாக ஆராயப்படவில்லை என்பதால் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்கு தேவையான நூல்கள், கட்டுரைகள், தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும் ஆய்வாளர் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் மனிதவள மேம்பாடு என்னும் தலைப்பில் ஆய்வு செய்துள்ளமையால் தரவுகள் சேகரிப்பதில் தெளிவு உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம். எனவே தரவுகள் முழுமையாக சேகரிக்கப்பட்டு நிரல் படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.

சமூக உறவுகள் அடிப்படைப் புரிதல்கள்

உறவு என்பது உலகத்தில் உள்ள அனைத்து உயிர்ன்ங்களுக்கும் இன்றியமையாதாகும். உறவுகளில் முதன்மையானதாக கருதப்படுவது தாய், தந்தை என்ற இரண்டு வித உறவுகளாகு. அனைத்து உறவுகளின் கிளைப்பெயர்ர்கள் தாய், தந்தை என்ற உறவுகளில் இருந்துதான் பிரிக்கின்றனர் என்கிறனர் மானிடவியல் அறிஞ்சர்கள். தாய் வழிசமூகம், தந்தை வழி சமூகம் என்பது இரத்த உறவுகளின் அமைப்பாகும். சமூக உறவு என்பது மனிதன் உலகத்தின் ஊடாக பிராயாணம் செய்கிறபோது கிடைகின்றவையாகும். பிரயாணத்தின் ஊடகா மனிதன் பெறுகின்ற உறவு தேவைகளை முன்னிருத்தி அமைவதாகும். இதேவையென்பது நிகழ்கால கருத்தியல் வழியாக உருவாகும். இப்படி வருகின்ற உறவுகளில் நட்பு வலிமை உடையாதாக மாற்றம் பெற்று சமூகத்தில் வளர்ச்சி பெற்றது. அவ்வையாரின் கவிப்புலமையை பெரிதும் வியந்த அதியமான் தனக்கு அபூர்வமாக கிடைத்த நெல்லிக்கனியைத் தந்து தன்னுடைய நட்பை கட்டமைத்தான். கோப்பெருஞ்சோழன் அரச பதவியைத் துறந்து வடக்கு நோக்கி உண்ணாநோன்பு இருந்து உயிர் விடத்தயாராகிறான். பொத்தியார் என்ற புலவர் சோழ மன்னனிடம் உங்கள் விருப்பம் ஏதும் இருந்தால் கூறுங்கள் அதை நிறைவேற்றுகிறேன் என்றார். கோப்பெருஞ்சோழன் என் அருகில் வடக்கிருப்பதற்கு ஒரு இடம் விடுக என் நண்பன் பிசிரந்தையார் வருவான் என்றார். புலவர் பொத்தியர் சோழ மன்னனிடம் நீங்கள் அவரைப் பார்த்ததே இல்லை அவர் எப்படி வருவார் என்று கேட்டார். பிசிரந்தையார் கண்டிப்பாக வருவார் என்று சோழன் நம்பிக்கையுடன் கூறினார். அதைப்போல் பிசிரத்தையாரும் சோழமன்னனிடம் வடக்கிருந்து உயிர் நீக்க வந்தார். இத்தகைய உறவுகளின் வழியக நட்பு என்ற சமூக உறவு உருவாகிறது.

பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் அரசு உருவாக்கம் மன்னர்களின் பேராசையாக இருந்தது. பேரரசு உருவாக்காத்தில் நட்பு முதன்மையானதாக அமைந்தது. சோழப் பேரரசும் பெருந்தத்துவமும் என்ற கட்டுரையில் கைலாசபதி (1966) சமூக உறவுகளில் நட்பு முதன்மையாக இருப்பதற்கு காரணம் “தொன்று தொட்டுத் தமிழர் தம் மரபில் வந்த உணர்ச்சிகள், நம்பிக்கைகள், அனுபவங்கள் முதலிய யாவற்றையும் ஒட்டியும் வெட்டியுமே சித்தாந்தம் உருப்பெற்றது. அதற்கு ஒரு தார்மீக பலம் இருந்தது; அது முக்கியமான

வகையில் இன்னும் செயற்பட்டு வருகின்றது. அதுபற்றி ஐயமில்லை. ஆனால் எந்தத் "தத்துவத்தையும் குறிப்பாக அதன் சகல வடிவங்களையும் எடுத்துக்கொண்டு அவை சரித்திரத்தில் என்ன பாத்திரம் வகிக்கின்றன என்று நாம் பார்க்க விரும்பினால்" நட்பு என்ற சிந்தாந்தக் கருத்தியல் புலப்படும். அரசு உருவாக்கத்தில் நட்பு முதன்மையாக்கப்பட்டதற்குக் காரணம் பெரும் பேரரசுகளை ஒரு தலைமையின் கீழ் ஆட்சி செய்வது கடினமாக இருந்தது. பெரும் நிலங்களை சிறு சிறு பிரிவுகளாக பிரித்து ஆட்சி செய்தனர். சோழ நாடு ஒன்பது மண்டலங்களாக பிரித்து ஆட்சி செய்தனர் என்று கைலாசபதி (1966) குறிப்பிடுகின்றார். இத்தகைய மண்டலங்களை ஆட்சி செய்ய நம்பிக்கையுடையவன் தேர்வு செய்யப்படுகிறான். இவர்கள் நட்புக்குரியவர்களாக மாற்றம் பெறுகிறார்கள். இங்கே துரோகம் உதயமாகிறது. இதையெல்லாம் கண்ட வள்ளுவர் நட்பு என்ற காருத்தியல் கட்டமைப்பை உருவாக்கியுள்ளார்.

வள்ளுவர் கட்டமைத்த நட்பு

நட்பு என்பது முக மலர்ச்சியுடன் காட்டுவது நட்பு இல்லை. ஆழ்மன உணர்வுடன் மேற்கொள்ளும் நட்பு சிறந்ததாகும். ஏனெனில் நட்பு போல் சிறந்த பாதுகாப்பு வேறேதுமில்லை. அறிவுடையவர்களிடம் கொண்டுள்ள நட்பு வளர்பிறை போன்றது. அதைப்போல் அறிவில்லாதவர்களுடன் கொள்ளும் நட்பு தேய்பிறை போல் குறைந்து போகும். இத்தகைய நட்பு,

"நவில்தொறும் நூனயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு" (திருக்குறள், 783)

என்ற குறளின் மூலம் நூலின் தன்மையும் நட்பின் பண்பையும் ஒரே நேர்கோட்டில் பயனிக்க வைக்கிறார். நூலைப் படிக்க படிக்க இலக்கிய நயம் புலப்படும் என்பதும் பழக பழக உறவின் தன்மை வலிமைபெறும் என்பதை ஆய்வியல் நோக்கில் உணரவேண்டும். நூலை பலமுறை வாசிக்க வேண்டும் என்பது வள்ளுவர் கால இயல்பாக இருந்திருக்கிறது. இதைப்போல் பலமுறை பழகும் மனிதனால் நமக்கு இன்பம் வருமானால் அத்தகைய நபர் நட்புக்குரியவர் ஆவார். இவர்களே பண்புடையவர்களாவார். நூல் வாசிப்பு என்பது வெற்று தளத்தில் நிகழ்த்தப்படுவதில்லை பொருண்மையியல் பின்புலத்தில் வாசிப்பு நிகழ்த்தப்பட வேண்டும். எனவே,

"புணர்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்" (திருக்குறள், 785)

ஒருவரோடு ஒருவர் நட்பு செய்வதற்கு ஓர் இடத்தில் கூடுதல், பலமுறை கண்டு பேசி உறவாடுதல் தேவையில்லை. ஒத்தமனம் இருப்பதே நட்பாவதற்குரிய தகுதியாகும். எனவே, இன்முகம் காட்டி இதயமர நேசிப்பதே உண்மையான நட்பாகும்.

தீய வழியில் செல்லும் நண்பனை கடிந்துரைத்து நல்வழி காட்டுதல் நட்பிற்கு முக்கியமான கடமையாகும். எனவே, நண்பனுக்கு வரும் துன்பத்தை உடனே தீர்க்க முவருபவனே உண்மையான நட்பாகும்,

"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு" (திருக்குறள், 788)

இக்குறளில், உடுத்திய உடை உடலை விட்டு நழுவுவது தெரிந்தால் உடனே தன் கை சரி செய்வது போல நண்பன் துன்பத்தில் இருக்கிறான் என்பதை உணர்ந்தாலே நட்பாகும். வள்ளுவர் காலத்தில் உடுத்திய உடையும் உள்ளார்ந்த உறவும் ஒரே நேர்கோட்டில் கண்டிருப்பது கவனத்திற்குரியதாகும். உடை களைந்து வாழ்தல் சமூக இழிவாக இருந்துள்ளது. அதனால் தான் தண்டிக்கும் முறைகளில் உடை களைந்து துன்புறுத்துதல் நடப்புலகிலும் நிகழ்வதைக் காணமுடிகிறது. முடிவாக வள்ளுவர் நட்பில் பெருமை பேசுதல் கூடாது என்கிறார்.

சமூக உறவு உருவாக்கத்தில் நட்பின் தன்மைகள் திட்டமிட்டு கட்டப்படுவதைக் கானலாம். போர்கால சமூகத்திலிருந்து விடைபெற்று வாழ விரும்புகிற மக்களின் வாழ்க்கை, அற உணர்வுடைய சமூக உருவாக்கம் நிகழ்த்துக் கலையில் வள்ளுவரின் நட்பு அதிகாரம் கையாளப்படுகிறது. போர்க்கால சமூகத்தில் ஆடை களைதல் இயல்பானதாகும். சான்றாக,

"அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு" (திருக்குறள், 787)

இக்குறளின் வழி அழிவு வரும்போது அதனை நீக்கி நாமும் அவ் அழிவில் பங்கெடுக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர். போர்கால சமூகத்தில் அழிவை பெருமையாக பேசுதல் சிறப்பாகும். புறநானூறு, பரணி போன்ற இலக்கிய கருத்தியல் பொருத்திப்பார்க்கலாம். அற நெறி காலத்தில் உயிர் துன்பப்படுவது அறமாகது. அத்துன்பத்தைப் போக்குதலே வள்ளுவர் கால அறமாகும். இத்தகைய சமூக உறவு உருவாக்கத்தில் வள்ளுவரின் நட்பு அதிகாரம் அமைந்துள்ளது.

நட்பின் வகைகள்

வள்ளுவர் நட்பை தீ நட்பு, கூடா நட்பு என் இரண்டாக வகைப்படுத்துகிறார். தீ நட்பென்பது "நாம் தனியாக இருக்கும்போது நம்மைப் புகழ்ந்து பேசுவர் பலபேர் கூடியிருக்கும் சபையில் நம்மை எள்ளி நகையாடுவர்"(திருக்குறள், 820). இக்குணம் கொண்டவர்கள் தீ நட்புக்குரியர். வள்ளுவர் போர்க்கால சமூக பின்னனியை உதாரணம் காட்டுகிறார், "போர்வரும் காலங்களில் தம்முடன் துணையிருக்கும் குதிரை போர்களத்திலே தாக்கப்படும்போது தன்னை விட்டுவிட்டு ஓடிவிடும் குதிரை போல் நட்பு உடையவர்கள் இருந்தால் தீ நட்பாகும்" (திருக்குறள், 814) போர்கால சமூகத்தை விமர்சிப்பதன் மூலம் அற நெறி வாழ்வியலை முன்நிறுத்துகிறார் என்பதை உணரலாம்.

இத்தகைய தீ நட்பை குறித்து கூறும் வள்ளுவர் பிராய்டின் உளவியல் சிந்தனையை கி.பி.இரண்டாம் நூற்றாண்டிலே எடுத்துரைக்கிறார்.

"கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு" (திருக்குறள், 819)

கனவில் கூட வரக்கூடாத நட்பு தீ நட்பு என்கிறார். இவர்கள் செயல்வேறு சொல்வேறு என்ற கருத்தியல் முரண் உள்ளவர்கள் என்கிறார். போர்கால சமூகத்தில் பகை முரண் இருக்கும். அற நெறிகாலத்தில் கருத்தியல் முரண் உருவாவதைக் காணலாம். கருத்தியல் முரண் உடையவர்கள் போரின் கொடிய வளைவிட கொடியவர்கள்.

கூடா நட்பு குறித்து பேசும் வள்ளுவர் விலை மகளிர் சமூகத்தை முதலில் சாடுகிறார்,

"இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறுபடும்" (திருக்குறள், 822)

விலை மகளிர் பொருளாசை காரணமாக ஒவ்வொரு ஆடவராக தேடுவது போல் நம் இனத்தார் போல் இருந்து கொண்டு நம் இனத்துக்கே பொருளாசையின் காரணமாக துரோகம் செய்வார்கள். இவர்களைக் கூடியவரையில் தன் கூட்டத்திலிருந்து சிறிது சிறிதாக விலக்குதல் சிறப்பாகும். உடனே விலக்கினால் நம்மிடம் உள்ள அத்துனை ரகசியங்களும் மற்றவர்க்குத் தெரியப்படுத்திவிடுவான். ஆகையால் இவர்களை,

"பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகநட்பு ஓரீஇ விடல்" (திருக்குறள், 830)

இக்குறளின் மூலம் விளக்குகிறார். பகைவரே தமக்கு நட்பாக வந்தாலும் அகத்தால் நட்பு கொள்ளமாட்டார். காலம் செல்ல செல்ல முக நட்பையும் நீக்கிவிட வேண்டும் என்கிறார். முகத்தால் கொள்ள வேண்டிய நட்பினை நீங்கள் கொள்ளுங்கள் ஆனால் அதை விரைவில் நீக்கிவிட வேண்டும் என்ற கருத்து வள்ளுவரால் முன்வைக்கப்படுகிறது.

வள்ளுவர் நட்பின் வழி உருவாக்கிய சமூக உற்பத்தி

சமூக உருவாக்கத்தில் நட்பை ஒரு காரணியாக கட்டமைத்துள்ளார் வள்ளுவர்.

1.எல்லாராலும் விரும்பப்படுபவர் ஒருவர் இருக்க வேண்டுமானால், நம்முடன் நட்பாக இருந்து தீமை செய்தாலும் அவர்களை எப்போதும் பழகிய பண்போடு இருப்பவர்களே எல்லாராலும் விரும்பப்படுபவர் ஆவார். போர்கால சமூகத்தின் உணர்ச்சியை மலுங்கடித்தல் முதல்படி.

2. உலகம் விரும்பும் மனிதனாக இருக்க வேண்டுமானால், நெடுங்காலமாக பழகி வந்தவர் செய்த தவறை மறந்து அவருடனே தொடர்ச்சியாக பயணம் செய்பவர்களை உலகம் விரும்பும். தவறை மறக்கும் தன்மை உருவாக்கப்படுகிறது. எதிர்வினை ஆற்றாத சமூகத்தை உருவாக்குகிறார்.

3. பொருமை உடைய சமூகத்தை உருவாக்க முயற்சிக்கிறார். நம்முடைய நெருங்கிய நண்பர் நமக்கு வருந்தக்கூடியவற்றைச் செய்தாலும் அவர் அறியாமையால் செய்ததாக கருதி பொருத்துள் கொள்ளவேண்டும்.

4. அறிவுடையாவர் என்று கூற வேண்டுமானால் நம் நண்பர் நம்மைக் கேட்காமலே நட்புரிமையால் செய்தால் அதைப் பொருத்துக் கொள்பவர். எல்லாத்தையும் ஏற்றுக்கொல்ல வேண்டும் என்ற ஒரு சமூகம் உருவாக்கப்படுகிறது.

முடிவுரை

நட்பு என்ற கருத்தியல் மூலம் வள்ளுவர் போர்க்கால சமூத்தை அற நெறிகால சமூக உருவாக்க முயற்சியைக் கட்டமைத்துள்ளார். அறிவுடையவர், உலகத்தால் விரும்பப்படுபவர், பொறுமை, சகிப்புத்தன்மை என்ற கருத்தியல் சமூகத்தை கட்டமைத்துள்ளார். போர்கால சமூகத்தில் பகை முரண் இருக்கும். அற நெறிகாலத்தில் கருத்தியல் முரண் இருக்கிறது. கருத்தியல் முரண் உடையவர்கள் போரின் கொடிய வளைவிட கொடியவர்கள். பொருளாசை காரணமாக சமூகத்தில் தீமைகள் தொடர்வதை அறவே நீக்கவேண்டும் என்ற வாழ்வியல் நியதி கட்டமைக்கப் படுகிறது. போர்க்கால சமூக மாற்றத்தை நட்பு என்ற காரணிமூலம் மாற்றியமைக்கம் முயற்சியை வள்ளுவர் நான்கு அதிகாரங்கள் மூலம் நிகழ்த்தியுள்ளார். நட்பு, தீ நட்பு, கூடா நட்பு, பழமை என்ற அதிகாரங்கள் சமூக உறவுகள் கட்டமைப்பின் மூலம் எடுத்துரைப்பதைக் கணமுடிகிறது.

REFERENCE

[1] Dhandapanithesigar., S. (1950), ***Thirukkural,*** Tharumapura

athinam,www.tamildigitallibrary.in/admin/assets/book/TVA_BOK_0012344_திருக்குறள்_உரைவளம்.pdf

[2] Kailasapathi., K., (1966), ***Pandaithamilar valvum valipadum***, Chennai: Parinilaiyam.

http://www.project.jfn.ac.lk/tdp/en_pandaitamil.php#

[3] Pirabavathi.,k., ***inavaraiviyal arimugam***, file:///C:/Users/lenovo/Downloads/3-2-103.pdf, International Journal of Multidisciplinary Research and Development, www.allsubjectjournal.com.

[4] Pope., G., U., ***Thirukkural,*** *http://www.tamilvu.org/library/l2100/html/l2104vur.htm*

[5] Manikam., Va., suba., (1993), ***Valluvam,*** Chennai: Manivasakar pathipagam.
http://www.tamilvu.org/library/nationalized/pdf/65-va.suba.manikkam/valuvam.pdf

[6] Manikam., Va., suba., (1993), ***Thamil kathal,*** Chennai: Manivasakar pathipagam.

[7] Saravanajothi seetharaman (2020), ***Morality Thoughts and Social Awareness in Vivekasinthamani,*** *Journal of Emerging Technologies and Innovative Research (JETIR) www.jetir.org.*

[8] Saravanajothi seetharaman (2020), ***Avoiding mean associations in the socio political background of Thirukkural.*** International Journal of Creative Research Thoughts (IJCRT) www.ijcrt.org.

[9] Saravanajothi, S. (2020), ***Ethic literature and tradition of thinnai theory,*** Journal Of Tamil Studies Vo 1 No 1., https://ejournal.upsi.edu.my/index.php/JTS/issue/view/321

[10]***Sanga Kalathil natpu,*** (December 22, 2014) http://paniveli.blogspot.com/2014/12/blog-post.html